**செய்தி வெளியீடு எண்: 56/2022** **நாள்: 05.07.2022**

**மெட்ரோ இரயில் பயண அட்டை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி வாயிலாக 21 ஆயிரத்து 418 நபர்கள் புதிய பயண அட்டை வாங்கியுள்ளார்கள் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தகவல்**

கோயம்பேடு, சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பாக சென்னை மெட்ரோ இரயில் பயண அட்டை வாங்குவோர் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருவதாகவும், மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ பயண அட்டை விழிப்புணர்வு நிகழ்ச்சி வாயிலாகவும் ஒரு மாதத்திற்கு தற்போது 5 ஆயிரம் மெட்ரோ இரயில் பயண அட்டைகள் விற்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்கம் பிரிவு சார்பாக சென்னை மெட்ரோ இரயில் பயண அட்டை குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கடந்த ஆறு மாத காலமாக நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி சென்னை மத்திய சதுக்கம், கத்திப்பாரா, சைதாப்பேட்டை, செனாய் நகர், அசோக் நகர், வடபழனி போன்ற பல்வேறு மெட்ரோ இரயில் நிலையங்கள் அருகிலும், பள்ளி கல்லூரி மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பயண அட்டையை பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு 20% கட்டண தள்ளுபடி அளிக்கப்படுகிறது என்பதை பற்றிய தகவல்களும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வின் வாயிலாகவும், மெட்ரோ இரயில் நிலையங்களிலும் கடந்த மார்ச் மாதத்தில் 2 ஆயிரத்து 515 பயண அட்டைகளும், அதேபோல் ஏப்ரல் மாதத்தில் 6 ஆயிரத்து 12 பயண அட்டைகளும், மே மாதத்தில் 5 ஆயிரத்து 815 பயண அட்டைகளும், ஜூன் மாதத்தில் 7 ஆயிரத்து 76 பயண அட்டைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பயண அட்டைகள் ஒரு மாதத்திற்கு 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் விற்பனை செய்யப்படுகிறது. மெட்ரோ பயண அட்டையின் பயன்பாட்டை மக்கள் அறிந்து வருவதை காட்டுகிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**